Selection of Tahsildars

* 335 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether there is any proposal to amend the rules relating to the selection of Tahsildars and Deputy Tahsildars by promotion under the Madras Revenue Subordinate Service ; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) It is proposed to fix 1st April as a common qualifying date for acquiring the qualifications (both test and service) for inclusion in the lists of Tahsildars and Deputy Tahsildars in order to give an equitable treatment to the persons of all districts.

திரு. எம். வி. கரிவேங்கடம் : மாவட்டத்திற்கு மாவட்டம் இந்தத் தேதி மாற்றப்பட்டு, தனித்தனியாக விதிக்கப்பட்டிருந்த காரணத்தினால், பலருக்கு உத்தியோக உயர்வு கிடைக்காமல் இருக்கிறது. ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்களுக்குச் சில விதிவிலக்கை அளித்து, அந்தப் பாதிப்பைப் போக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்பது பற்றி என்னிடம் இப்பொழுது பதில் இல்லை. இனிமேல் எந்த முறை அனுஷ்டிக்க வேண்டும் என்பதற்குத் தான் நான் பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. ம. கமலநாதன் : ஒரு தாலுகாவினுடைய அதிகாரி தாசில்தார். ஒரு தாலுகாவில் 5 பஞ்சாயத்து யூனியன்களுக்குக் குறைவு இல்லாமல் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கும், தாசில்தாருக்கும் அடிப்படைச் சம்பளம் ஒரே மாதிரியாக இருக்கிறது. அந்தக் கமிஷனரை ஏறக்குறைய டெப்யூடி தாசில்தார் கிரேடில் போடுகிறோம். அடிப்படைச் சம்பளம் ஒரே மாதிரியாக இருப்பதினால், அவர்களுடைய தகுதியை நாம் நிர்ணயிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். ஆகவே, தாசில்தார் சம்பளத்தைக் கொஞ்சம் அதிகப்படுத்துவது பற்றி உத்தேசம் ஏதேனும் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது அதுபோன்ற உத்தேசம் ஒன்றுமில்லை.

சிதம்பரத்தில் மதகுப் பாலங்களை அகலப்படுத்தல்

* 366 கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியம் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுகாவில் ஹைவேஸ் ரோடிலும், யூனியன் ரோடிலும் குறுகலாயுள்ள மதகுப் பாலங்களை அகலப்படுத்த உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லை.